# மில்வாக்கி தமிழ் சங்க பொங்கல் விழா

பிப்ரவரி 14, 2015 அன்று மில்வாக்கி தமிழ் சங்கம், பொங்கல் விழாவை விமர்சையுடன் கொண்டாடியது. காதலர் தினத்தன்று கொண்டாடியதால் தமிழர் பண்பாட்டின் வழி, சூரிய பகவனுக்கு நன்றி செலுத்துவதோடு நின்றுவிடாமல், அன்பு கலந்து தமிழ் சொந்தங்கள் ஒரு இனிய மதிய பொழுதை ஆடல் பாடலுடன் கொண்டாடி மகிழ்ந்தனர்.

வர்ஷா சிரீராம், அனிஷா மணிவண்ணன், பள்ளி குழந்தைகள் நிகழ்ச்சியை தமிழில் தொகுத்து வழங்க, பெற்றோர்கள் பூரிப்புடன் ரசித்தனர். நாட்யோட்சவ் நடனப் பள்ளி மாணவர்கள் "மலரஞ்சலி" நடனமாடினர். வர்ஷாவும் அனிஷாவும் "தை பிறந்தால்" இசை நடனம் வழங்கினார்கள். நாட்யார்ப்பனா நடன பள்ளி மாணவர்கள் அருமையான நடனங்கள் வழங்கினார்கள்.

இந்த நடனக் குழுக்களின் நாட்டியங்களுடன், குட்டிக் குழந்தைகளின் இனிய இசையுடன் கூடிய ஆடல் என்று நிகழ்ச்சி களை கட்டியது. "எதிரும் புதிரும் - கருத்து பரிமாற்ற நிகழ்ச்சி"யில் "திரைப்பட பாடல்கள் தமிழ் மொழிக்கும் கலாச்சாரத்திற்கும் பெருமை சேர்க்கின்றது - இல்லை" என்று இரு அணிகள் மோத, சிரிப்பொலியில் அரங்கமே மகிழ்ச்சியில் திளைத்தது.

இறுதியாக, மில்வாக்கி இசை குழுவான "மில்வாக்கி மில்மினிகள்" மறைந்த இயக்குநர் சிகரம் கே. பாலசந்தருக்கு ஒரு இசை சமர்ப்பணத்தை வழங்கியது. அரங்க அமைதியில் இசை தவழ்ந்தோட, பல மெல்லிசை பாடல்களின் கதகதப்புடன், நிகழ்ச்சி செவ்வனே நடந்து முடிந்தது.

- தேன்மொழி சசிக்குமார், மில்வாக்கி, விஸ்கான்ஸின்.